1975 ஏப்ரல் 1]

Consumer Co-operative Societies

* 514 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(a) whether the Chairman in-charge of the Tamil Nadu Co-operative Union had represented to the Government recently that the retail distribution of foodgrains be given to consumer co-operative societies; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இன்றியமையாப் பொருள்கள் விற்பனை செய்வதைக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து எடுத்துவிட்டு தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகத்திடம் ஒப்படைக்கக்கூடாது என்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க ஒன்றியத்தின் தற்போதைய தலைவருமான செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கத்தின் தலைவர் 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசிடம் முறையிட்டார்.

(இ) இன்றியமையாப் பொருள்களை விற்பனை செய்யும் பணியில் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகத்தை மொத்த வணிக முகவரமைப்பாகவும், கூட்டுறவுச் சங்கங்களைச் சில்லறை வணிக முகவரமைப்புகளாகவும் வளர்ச்சி பெறச் செய்வதென்றும், அதையடுத்து, வருங்காலத்தில் இன்றியமையாப் பொருள்களைச் சில்லறையில் வழங்குவதைப் படிப்படியாகக் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைப்பது என்றும் அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது.

சிறு தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்கள்

* 515 வினா—திரு. கே. ரங்கநாதன்: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் உள்ள சிறு தொழில்களுக்குத் தேவைப்படும் நிலக்கரி, பிக் அயர்ன், மோட்டார் ஸ்டெம்பிங்ஸ், காப்பர் ஒயர்ஸ் போன்ற மூலப்பொருட்கள் சரிவரக் கிடைக்கின்றனவா?

(இ) இல்லை எனில், அதுகுறித்து அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

[1975 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறு தொழில்களுக்கு தேவையான மூலப்பொருள்கள் சிலவற்றில் பற்ருக்குறை ஏற்பட்டது குறித்துப் புகார்கள் உள்ளன. கூடியமட்டில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு தொழில்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-30)

திரு. எம். சுரேந்திரன்: கோவை மாவட்டத்தில் சிறு தொழில்கள் பரவலாக வளர்ந்துள்ளன. அந்த இடத்தில் எந்த எந்த தொழில்களுக்கு என்ன என்ன அளவில் மூலப்பொருள்கள் பற்ருக்குறை ஏற்பட்டது, எந்த அளவில் அதற்கு அரசாங்கம் உதவி செய்திருக்கிறது, அதன் மூலம் தொடர்ந்து வருஷம் பூராவும் தொழில்கள் நடைபெறுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தேவையான மூலப்பொருள்கள் நிலக்கரி, பிக் அயர்ன், மோட்டார் ஸ்டாம்பிங்ஸ், காப்பர் ஒயர்ஸ் என்று கேள்வியில் சொல்லப் பட்டிருக்கிறது. காப்பர் ஒயர்ஸ் பற்றி தட்டுப்பாடு இல்லை, நேற்று முன்தினம் கோவையில் நடைபெற்ற விழாவில் கூட சிறு தொழில் அதிபர்கள் இப்போது மற்ற மூலப்பொருள்களுக்கு தட்டுப்பாடு இல்லையென்று சொன்னார்கள்.

Oil for industries

* 516 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state:

(a) wheher the current oil crisis has affected many industries in the State:

(b) if so, the details of the industries so affected; and

(c) the steps taken by the Government thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) கட்டுப்படியாகாத உலை எண்ணெய் விலையால், சில சிமிட்டி தொழில் பிரிவுகள் உற்பத்தியை ஓரளவுக்குக் குறைத்துக் கொண்டது.